www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 020

29 யூன் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# விநா(ய்)யகத்தின் எலிவலம்!

இந்திய – சிங்கள அரசுகளின் முதன்மைக் கைக்கூலிகளில் ஒருவரான அறிவழகன் என்றழைக்கப்படும் விநாயகத்தின் திருவிளையாடல்கள் தொடர்பாக கடந்த கறுப்பு இதழ்களில் எமது உறவுகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். தனது சித்துவிளையாட்டுக்கள் பலிக்காத நிலையில் இப்பொழுது புதிய எலிவலம் ஒன்றை விநா(ய்)யகம் என்ற அறிவழகன் மீண்டும் தொடங்கியுள்ளார்.

இதன் முதற்கட்டமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடன் தாங்கள் நேரடியாகத் தொடர்பு கொண்டதாகவும், பொட்டம்மானை நேரில் பார்த்ததாகவும் கூறிக்கொள்ளும் கும்பல் ஒன்றை இந்திய – சிங்கள கைக்கூலி விநா(ய்)யகம் களமிறக்கியுள்ளார். தென்கிழக்காசிய நாடு ஒன்றில் தமிழீழத் தேசியத் தலைவரைத் தாங்கள் சந்தித்ததாகவும், பொட்டம்மான் விழுப்புண்ணடைந்




திருப்பதாகவும் இந்தக் கும்பல் மக்களிடையே விசமத்தனமான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றன.

அனைத்துலக தொடர்பகம் உட்பட தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துக் கட்டமைப்புக்களும் கலைக்கப்பட்டதாக அண்மையில் இந்தக் கும்பலால் தொடங்கப்பட்ட இணையத்தளம் ஒன்றில் பொட்டம்மானின் பெயரால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் அதில் பொறுப்பாளர், தமிழீழ தேசிய புலனாய்வுத்துறை என்பதற்குப் பதிலாக, பொறுப்பாளர், புலனாய்வுப் பிரிவு என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருந்ததோடு, அதில் பொட்டம்மானின் கையெழுத்தும் இருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தின் நடைமுறைகளைப் புரிந்துகொள்ளாத – தெரிந்திருக்காத ஒருவரால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது இதிலிருந்தே பலரால் இலகுவாக இனம் காணப்பட்டிருந்தது.

இதிலும் மிகவும் நகைச்சுவையாக இந்த இணையத்தளம் தென்மேற்கு இலண்டன் மிச்சம் பகுதியில் வசிக்கும் சதா என்பரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருப்பது கணினியை இலாவகமாகக் கையாளக்கூடிய 11 அகவையுடைய சிறுவன் ஒருவனால் கண்டுபிடிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரில் இணையத்தளத்தை தொடங்கிய இந்த விநா(ய்)யகத்தின் கையாள், தனது வீட்டுமுகவரியை மறைக்கத் தெரியாத முட்டாளாக அமைந்ததுதான் நகைச்சுவை.

வி(நாய்)யகத்தின் பின்புலத்தில் இயங்கும் இந்தக் கும்பல்தான் தமிழீழத் தேசியத் தலைவருடன் தங்களுக்கு நேரடித் தொடர்பு இருப்பதாகக் கூறி மக்களை ஏமாற்றும்


துரோகத்தின் வித்து
விநாயகம் - கதிர்காமத்தம்பி அறிவழகன்

முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்தக் கும்பலின் முகவர்கள் இலண்டனில் மட்டுமல்ல ஏனைய நாடுகளிலும் இயங்கி வருகின்றார்கள் என்பதை எமது உறவுகளின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். இவர்களால்தான் அண்மையில் தென்மேற்கு இலண்டனில் இடம்பெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற டாக்டர் என்.எஸ்.மூர்த்தி, மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் ஐயாவின் புதல்வர் டேவிட் பரராஜசிங்கம் ஆகியோர் மிரட்டப்பட்டு நாடுகடந்த அரசாங்கத்தில் இருந்து பின்வாங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




“கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு”

www.tamilarangam.net



# யார் இந்த ஜனகன் மாஸ்ரர்?

விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினரான தணிகாசலம் தயாபரன் (ஜனகன் மாஸ்ரர்) என்பவர், இயக்கத்தில் இருந்து தலைவர் அவர்களால் நேரடியாக ஒழுக்காற்று நடவடிக்கையில் வெளியேற்றப்பட்ட நபராவார். தென்மேற்கு இலண்டனில் 309வது இலக்கத்தில் போட்டியிட்ட இவர் தன்னை இரகசிய விடுதலைப்புலி எனக்கூறிக்கொள்வார். இவர் விடுதலைப்புலிகளில் இருந்தகாலத்தில் - ஏககாலத்தில் இரு பெண் போராளி களை 'விரும்பி'யிருந்தார்(?).

இவர் விடுதலைப்புலிகளின் முன்னணி உறுப்பினராக இருந்தமையால் அப்பெண் போராளிகள் தந்தையாக மதிக்கும் தேசியத்தலைவருக்கு தம் விருப்பம் தெரிவித்து கடிதம் எழுதியிருந்தனர். இரு கடிதங்களும் ஒரே காலப்பகுதியில் தலைவர் அவர்களிடம் வந்தபோதுதான் இவரது 'குட்டு' உடைந்தது. உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை இவர் மேல் பாய்ந்த போது அதிர்ந்து விட்டார். விசாரணை முடிவில் அனைத்துப் பொறுப்புக்களும் எடுக்கப்பட்டு 'காற்றுப்பிடுங்கிய' நிலையில் விடப்பட்டார். பின்னர் நாட்டைவிட்டு வெளியேறி இலண்டன் வந்தடைந்தார்.

இப்படியான ஜனகன் மாஸ்ரர் தேசியம் பேசிக்கொண்டு வியாபாரத்தில் இறங்கியதில் சில தீய சக்திகள் உடந்தையாக இருப்பதும் நாமறிவோம். அத்தீய சக்திகளை எதிர்வரும் காலங்களில் படங்களுடன் வெளியிடுவோம்.

இவர் நாடுகடந்த அரசின் 'கதிரையை' பிடிப்பதற்கு தனது அடாவடித்தனங்களையும், அத்துமீறிய செயற்பாடுகளையும் கட்டவிழ்த்திருந்தார். தனது இடத்தை தக்கவைப்பதற்காக சிறிலங்காவின் புலனாய்வில் தற்போது ஈடுபட்டுள்ள விநாயகத்தின் உதவியை நாடியிருந்தார். தற்போது இரகசியமாக கே.பியுடன் தொலைபேசியில் தொடர்புகளை பேணி வருகின்றார். இவர்பற்றி மிகவும் விழிப்புடன் இருக்குமாறு எமது மக்களை கேட்டுக் கொள்கின்றோம்.



தணிகாசலம் தயாபரன்
THANIKASALAM THAYAPARAN
309 X

# அடுத்து என்ன?

கே.பி பற்றி நாம் கடந்த காலங்களில் சொல்லியிருந்த தகவல்களை விட இனி நாம் தரும் தகவல்கள் மிகவும் அதிர்ச்சிகரமானதாக இருக்கும். போராளி களை நயவஞ்சகமாக சாகடித்து, மக்களைப் நம்பவைத்து உயிரோடு புதைக்க காரணமாக இருந்த கே.பி கும்பல் பற்றிய வெளிவராத உண்மைகள், அவர்கள் பற்றிய தகவல்கள் படிப்படியாக நாம் தருவோம். இவர்கள் எப்படி சிங்களத்துக்கு விலைபோனார்கள் என்பதும், இவர்களின் நடவடிக்கைகள் எப்படியானவை என்பதும் நீங்கள் விரைவில் அறிவீர்கள். இதுவரை காலமும் எமது விடுதலை இயக்கம் ஏன் இவற்றை மறைத்து அல்லது மறந்து இருந்தது என உங்கள் மனதில் எழும் கேள்விகளும் நாம் அறியாமல் இல்லை. கடந்த காலங்களைப்போலவே இவற்றுக்கும் விரைவில் உங்களுக்கு விடை கிடைக்கும்.

# 2000ற்கும் மேற்பட்ட சரணடைந்த போராளிகள் படுகொலை

கடந்த 2009 மே மாதம் 2000ற்கும் மேற்பட்ட சரணடைந்த போராளிகள் சிறீலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.

சரணடைந்த சில மாதங்களுக்குள் முக்கிய பொறுப்பாளர்கள் மற்றும் முதன்நிலைப் போராளிகளை அடையாளம் காணப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டனர்.

